# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

**மானியக் கோரிக்கை எண் - 21**

**அறிவிப்புகள்**

**2021 - 2022**

## 1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சாலை மேம்பாட்டுத்திட்டம்

மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் தாலுகா தலைமையிடங்களை இணைக்கும் 2200 கி.மீ நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், போக்குவரத்து செறிவின் அடிப்படையில், அடுத்த 10 ஆண்டுகளில் நான்கு வழித்தட சாலைகளாகவும் 6700 கி.மீ. சாலைகள் இரண்டு வழித்தட சாலைகளாகவும் **"மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சாலை மேம்பாட்டுத்திட்டம்"** என்ற புதிய திட்டத்தின் கீழ் அகலப்படுத்தப்படும். இதன் முதற்கட்டமாக நடப்பாண்டில் போக்குவரத்து செறிவு அதிகமுள்ள 250 கி.மீ. சாலைகளை ரூ.2000 கோடி மதிப்பில் நான்கு வழித்தட சாலைகளாகவும், போக்குவரத்து செறிவு அதிகமுள்ள 600 கி.மீ. சாலைகளை ரூ.1200 கோடி மதிப்பில்

இரு வழிசாலைகளாகவும் அகலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனால், போக்குவரத்து நெரிசல் குறைவதோடு தங்கு தடையற்ற பாதுகாப்பான போக்குவரத்து உறுதிப்படுத்தப்படும்.



## 2. நகரப்பகுதி மேம்பாடு

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளின் மையப்பகுதிகளில் பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகங்கள் இருப்பதால், அப்பகுதியில் மக்கள் பயன்பாடு அதிகரிக்கிறது எனவே நகரப் பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் தேவையான இடமிருப்பின் கடின புருவங்களுடன் கூடிய நான்கு வழித்தடமாக அகலப்படுத்தப்படும் மற்றும் இடவசதி இல்லாத பகுதிகளில், நெடுஞ்சாலை எல்லைக்குட்பட்ட பகுதி வரை சாலைகள் அகலப்படுத்தப்படும். மேலும் மழை நீர் தேங்குவதை தடுப்பதற்காக நடைபாதைகளுடன் கூடிய வடிகால்கள் கட்டப்படும். இத்திட்டத்திற்கு ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தில் 10 சதவிகிதம் நிதி, அதாவது சுமார் ரூ.400 கோடி ஒதுக்கப்படும்.

## 3. தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாகக் கட்டுதல்.

நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் உள்ள 1281 பழைய தரைப்பாலங்களை ரூ.2401 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலங்களாக கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 648 தரைப்பாலங்கள் உயர்மட்டப் பாலங்களாக ரூ.609.71 கோடி மதிப்பில் கட்டப்படும்.



## 4. புறவழிச்சாலைகள் அமைத்தல்

போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், சாலை பாதுகாப்பினை மேம்படுத்தவும் நடப்பாண்டில் அறந்தாங்கி, திருச்சி (அரைவட்டசாலை), ஆலங்குடி, மயிலாடுதுறை, முசிறி, வெள்ளக்கோவில், திருப்பூர், காங்கேயம், பென்னாடம், செந்துறை, செங்கம், மேல்கச்சிராப்பட்டு, புதுவயல், தருமபுரி மற்றும் கெங்கவல்லி ஆகிய நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.9.83 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

நிலம் கையகப்படுத்தும் பணி நிறைவடைந்துள்ள சிவகங்கை, பார்த்திபனூர், கமுதி, திருத்துறைப்பூண்டி, அம்பாசமுத்திரம், பவானி, அருப்புக்கோட்டை(மேற்கு) மற்றும் உத்திரமேரூர் ஆகிய புறவழிச்சாலைகளுக்கான கட்டுமானப் பணிகள் ரூ.595.54 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

கரூர் நகரத்தில் தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக புறவழிச்சாலை மற்றும் புதிய இணைப்புச் சாலை பணிகள் செயல்படுத்தப்படும்.



## 5. உயர்மட்ட சாலை அமைத்தல்

நகரப்பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு,

**திருச்சி மாநகரில்**

- தலைமை தபால் நிலையத்திலிருந்து காந்திசிலை, முத்தரையர் சிலை வழியாக நீதிமன்ற ரவுண்டானா வரையில் உயர் மட்ட சாலை அமைக்கப்படும்
- ஓடத்துறை காவிரி பாலம் முதல் அண்ணா சிலை மற்றும் கலைஞர் அறிவாலயம் வழியாக மல்லாட்சிபுரம் வரையில் உயர் மட்ட சாலை அமைக்கப்படும்

**மதுரை மாநகரில்**

- விமான நிலையத்திற்கு செல்லும் பயண நேரத்தை குறைக்கும் பொருட்டு நெல்பேட்டை முதல் அவனியாபுரம் புறவழிச்சாலை சந்திப்பு வரையில் உயர்மட்ட சாலை அமைக்கப்படும்.

- இப்பணிகள் மதுரை மற்றும் திருச்சி நகரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை ஆய்வுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படும்.

➢ உயர்மட்ட சாலை அமைக்க முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை ரூ.5.13 கோடி ரூபாயில் தயாரிக்கப்படும்.



## 6. சாலை மேம்பாலம் அமைத்தல்

- மதுரை மாநகரில், விரகனூர் சந்திப்பிலும், அருப்புக்கோட்டை சாலை சந்திப்பிலும், சாலை மேம்பாலம் அமைக்கப்படும் முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை ரூ.72 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.
- திருநெல்வேலி மாநகரில், புதிய பேருந்து நிலையம் அருகில் வீரமாணிக்கபுரம் சந்திப்பில் சாலை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.56 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

## 7. சென்னை மாநகரப்பகுதி மேம்பாடு

சென்னை பெருநகர பகுதியில், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக

- மத்திய கைலாஷ் சந்திப்பில் இராஜீவ் காந்தி சாலை மற்றும் சர்தார் பட்டேல் சாலையை இணைக்கும் வகையில் ரூ.56 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டப்படும்.
- மவுண்ட் பூந்தமல்லி ஆவடி சாலையில் இராமாபுரம் மற்றும் முகலிவாக்கம் சந்திப்புகளில் 3.14 கி.மீ நீளத்திற்கு உயர் மட்ட சாலை அமைக்கப்படும்.
- மவுண்ட் மேடவாக்கம் சாலை மற்றும் உள்வட்ட சாலை சந்திப்பில் கீழ்பாலம் அமைக்கப்படும்.

மேற்கூறிய இரு பணிகள் ரூ.403 கோடி மதிப்பில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும்.



- கிழக்கு தாம்பரத்தையும் மேற்கு தாம்பரத்தையும் முடிச்சூர் சாலையையும் இணைக்கும் விதமாக பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதை மற்றும் சேவைச்சாலை அமைக்கப்படும்.
- தாம்பரம் சண்முகம் சாலையை சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும் சாலை அமைக்கப்படும்.

இந்த இரு பணிகளுக்கு முதற்கட்டமாக ரூ.80இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 8. O.M.R. சாலையில் சுங்க வசூல் நிறுத்தம்

சென்னை மெட்ரோ இரயில் பணிகள் தொடங்கப்படுவதையொட்டி, இராஜீவ்காந்தி சாலையில் (O.M.R.) உள்ள பெருங்குடி, துரைப்பாக்கம், கலைஞர் சாலை மற்றும் மேடவாக்கம் சாலைகளில் உள்ள நான்கு சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூலிக்கப்படுவது வருகின்ற 30.08.2021 முதல் நிறுத்தப்படுகிறது.



## 9. சாலை பாதுகாப்புத் திட்டம்

சாலை விபத்துகளை குறைப்பதற்காகவும் உயிர் இழப்புகளைத் தவிர்ப்பதற்காகவும் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.200 கோடியும், விபத்து பகுதிகளை மேம்படுத்துவதற்கான சாலை பாதுகாப்பு நிதியில் ரூ.150 கோடியும் ஆக மொத்தம் ரூ.350 கோடி நிதியில் சாலை பாதுகாப்பினை உறுதிசெய்ய பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 10. சேவைச் சாலை விரிவாக்கப்பணி, புதிய இணைப்புச் சாலை மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல்.

- திருவண்ணாமலை நகரில் அமைய உள்ள புதிய மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள சாலை மேம்பாலத்திற்கான சேவைச்சாலையை அகலப்படுத்த நிலம் கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் அக்கரைப்பேட்டை மற்றும் கருவேலங்கடை கிராமங்களை இணைக்கும் விதமாக புதிய இணைப்புச் சாலை அமைக்கப்படும். முதற்கட்டமாக இப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.35 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.
- திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோவிலைச் சுற்றி தேர் ஓடும் மாடவீதியில் சிமெண்ட் கான்கிரிட் தளம் ரூ.15 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.



## 11. இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல்

- தஞ்சாவூர் மாவட்டம், திட்டையில் உள்ள குறுகிய சுரங்க பாதைக்கு மாற்றாகவும்,
- அவலூர்பேட்டை சாலையில் இரயில்வே கடவு எண்.56க்கு மாற்றாகவும்,

மாநில அரசு நிதியின் கீழ் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை ரூ.94 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

## 12. நபார்டு வங்கி கடனுதவியுடன் ஆற்றுப் பாலங்கள் கட்டுதல்

16 மாவட்டங்களில் உள்ள 558 கிராமங்களில் வசிக்கும் சுமார் 15 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் ரூ.425 கோடி மதிப்பில் 75 ஆற்றுப்பாலங்கள் நபார்டு வங்கி கடனுதவியுடன் கட்டப்படும்.



## 13. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளைத் தரம் உயர்த்துதல்

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 10,000 கி.மீ. நீள சாலைகள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட இதர சாலைகளாக படிப்படியாக தரம் உயர்த்தப்படும். முதற்கட்டமாக 2000 கி.மீ. நீளச் சாலைகள் தரம் உயர்த்தப்பட்டு பணிகள் தொடங்கப்படும்.

## 14. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை உலகத்தரம் வாய்ந்ததாக மேம்பாடு செய்தல்

1957 ஆம் ஆண்டு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. சாலை மற்றும் பாலங்கள் அமைப்பதிலும் ஆராய்ச்சியிலும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் அதி நவீன கட்டமைப்பைக் கொண்டுள்ளன. அதற்கு இணையாக, புதிய விஞ்ஞான உபகரணங்களை கொள்முதல் செய்து ஆராய்ச்சிகள் மேற்கொள்வதன் மூலம் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் உலகத்தரம் வாய்ந்ததாக மேம்பாடு செய்யப்படும்.



## 15. சாலை வகைப்பாடு தரம் உயர்த்துதல்

வாகனப் போக்குவரத்து, மக்கள் தொகை, புதியதாக அமைக்கப்படும் தொழிற்பேட்டைகள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை இணைத்தல் போன்ற காரணிகளின் அடிப்படையில் சாலைகளை தெரிவு செய்து மாநில நெடுஞ்சாலைகளாகவும், மாவட்ட முக்கிய சாலைகளாகவும் தரம் உயர்த்தப்படும்.

## 16.மதுரை சுற்றுச் சாலையில் சுரங்கப் பாதை அமைத்தல்

மதுரை விமான நிலைய ஓடுதள விரிவாக்கத்திற்காக மதுரை சுற்றுச் சாலையில் ஒரு கி.மீ. நீள வாகன சுரங்கப் பாதை ரூ.200 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.



## 17. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தொலைநோக்கு திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாட்டிலுள்ள சிறுதுறைமுகங்களின் சரக்கு கையாளும் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேம்படுத்தப்பட்ட கடலூர் துறைமுகத்தின் கட்டுமானங்களை பயன்படுத்தி, சிறு மற்றும் நடுத்தரக் கப்பல்களின் மூலம் தமிழகத்தின் மத்திய மற்றும் மேற்கு மாவட்டங்களுக்கு தேவையான சரக்குகள் ஆண்டொன்றுக்கு 25 இலட்சம் மெட்ரிக் டன் அளவில் கையாளப்படும்.